(இ) ஆம் என்றால், அபிப்பிராயங்களைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

ஈரோடு, கரூர் பேருந்து நிலையங்களிலுள்ள கழிப்பிடங்கள்.

*வினா எண். 94—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோடு, கரூர் ஆகிய இரு நகர் மன்ற பேருந்து நிலையங்களில் பொதுக்கழிப்பிடம் பயன்படுத்தும் பயணிகளிடம் கட்டணம் வசூலிப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அத்தகு நிலையங்களில் பொதுக் கழிப்பிடம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சியில் பிரதான பேருந்து நிலையத்தில் 6 இருக்கைகள் கொண்ட கழிப்பிடங்கள் கட்டப் பட்டு வருகின்றன.

திரு. யா. சை. மு. யூசுப் : நான் மூலக்கேள்வியில் குறிப்பிட்டிருப்பது, இரண்டு நகரமன்ற பேருந்து நிலையங்களில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் பற்றியது. தமிழ்நாட்டிலுள்ள பெருவாரியான நகரமன்றங்கள் பராமரிப்பிலுள்ள பொதுக் கழிப்பிடங்கள், குறிப்பாக பேருந்து நிலையங்களில் உள்ள கழிப்பிடங்கள் லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஏலம்விட்டு, ஏலம் எடுத்தவர்கள் பராமரிப்பில் விடப்படுகின்றன, அப்படி அவர்கள் பராமரிப்பில் விடும்போது, அவர்கள் பணத்தை மட்டும் வசூலிக்கிற அடிப்படையில் பணம் வசூலிக்கக்கூடிய அளவிற்கு பொதுக்கழிப்பிடங்களை சுத்தப் படுத்துவது கிடையாது. ஆகவே அதைப் பயன்படுத்துகிற பயணிகள் பொதுக்கழிப்பிடங்களை மோசமான நிலையில் பயன்படுத்துவதன் காரணமாக பல்வேறு தொத்துநோய்களுக்கு ஆட்படுகிறார்கள் என்பதை அரசு உணர்ந்து அதைத் தடுக்க

1980 பிப்ரவரி 7]

உடனடியாக இந்தப் பொறுப்பை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு உத்தரவை உடனடியாக அரசு பிறப்பிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பொதுவாக இந்தக் கட்டணக் கழிப்பிடங்கள சுத்தமான நிலையில்தான் பராமரிக்கப்படுகின்றன என்றுதான் அரசுக்குத் தெரியவருகிறது, குறிப்பிட்டு ஏதாவது புகார் தந்தால் அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்,

திரு என். கிட்டப்பா: இத்தகைய பொதுக்கழிப்பிடங்கள் உள்ள சிலயிடங்களில் சிறுநீர் கழிக்கக் கூட பத்துக் காசு வாங்கிக் கொண்டுதான் உள்ளே அனுப்புகிறார்கள். அதைக் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கட்டணக் கழிப்பிடங்கள் என்றால் கட்டணம் கொடுத்துத்தான் அதற்குரியதைப் பயன்படுத்த வேண்டும். சில இடங்களில் கட்டணம் இல்லாத கழிப்பிடங்கள் பக்கத்தில் இருக்கின்றன, அதைப் பயன்படுத்தலாம்.

சிவலிங்கபுரம் பள்ளிக் கட்டிடம்.

*வினா எண், 95— திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவில்பட்டி தாலுகா கடம்பூர் பேரூராட்சி சிவலிங்கபுரம் கிராமத்தில் 1967-ல் ஆரம்பப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டிடம்பூர்த்தி பெறாமல் மரநிழலிலும் ஓலைக் குடிசையிலும் பள்ளி நடத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில் அதற்கான காரணம் என்ன?

(இ) கட்டிடம் கட்டி முடிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தெரியும்.

(ஆ) பள்ளிக் கட்டிட வேலை கதவு நிலைமட்டம் வரை கட்டப்பட்டு மீதமுள்ள வேலை பேரூராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் செய்ய இயலாமல் நிறுத்தப்பட்டது.

(இ) பாக்கி வேலையை கோவில்பட்டி உதவி கோட்டப் பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று 31-3-80-க்குள் முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.